செ.வெ.எண்.23 நாள்.09.12.2017

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், அருகன்குளம் அரசு நடுநிலைப்பள்ளியில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்ட வகுப்பறை மற்றும் புதிய சிசிடிவி கேமிரா ஆகியவற்றினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். மேலும், பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், அருகன்குளம் அரசு நடுநிலைப்பள்ளியில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ள வகுப்பறை துவக்கி வைத்தல், புதிய சிசிடிவி கோமிரா துவக்கி வைத்தல், ஜனதா செம் நிறுவன பங்களிப்பு ரூ.5 இலட்சம் மதிப்பில் பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அடிக்கல் நாட்டுதல் ஆகிய முப்பெரும் விழா இன்று (09.12.2017) நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு, வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ள வகுப்பறைகளை திறந்து வைத்தார். புதிய சிசிடிவி கோமிரா பணிகளை துவக்கி வைத்து, பள்ளி வளாகத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சிக்கு வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எ. மனோகரன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

அருகன்குளம் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஊர் பொதுமக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு வந்திருந்து எங்களது ஊர் நடுநிலைப்பள்ளியில் CCTV கேமிரா அமைக்கப்பட்டுள்ளது. வகுப்பறைகளில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளது. இவைகளை தாங்கள் திறந்து வைக்க வேண்டுமெனவும், தனியார் நிதியுதவியுடன் பள்ளிக்கு சுற்றுச்சுவர் அமைக்கப்படவுள்து. தாங்கள் வருகைதந்து அடிக்கல் நாட்ட வேண்டுமென கோரிக்கை வைத்தனர். பொதுவாக பள்ளிகளுக்கு பல்வேறு வசதிகள் வேண்டுமென கோரிக்கைகள் வரும். ஆனால், நாங்கள் எங்களது பள்ளிக்கு தேவையான வசதிகளை செய்து விட்டோம். நீங்கள் வந்து திறந்து வைக்க வேண்டுமென அழைத்தது, மிகவும் ஆச்சரியமாக இருந்தது. உடனே இந்நிகழ்ச்சிக்கு வர ஒப்புக் கொண்டேன். அரசு உதவிகளை எதிர்பார்க்காமல் பொதுமக்களே இப்பள்ளிக்கு தேவையானவைகளை செய்து வருவது மாவட்ட ஆட்சித்தலைவராகிய எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது. நமது பள்ளிக்கு, நமது பங்களிப்பனை வழங்க வேண்டுமென்ற மக்களின் நல்ல நோக்கத்திற்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இன்று பேசிய வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பள்ளி வளாத்திற்குள் பேவர் பிளாக் அமைக்கப்டும் என அறிவித்துள்ளார்கள். இப்பள்ளிக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதனை கருத்திற் கொண்டு, இப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் சிறப்பாக கல்வி பயில வேண்டும். மேலும், அனைவரும் கண்டிப்பாக உயர் கல்வி பயில வேண்டும். மேலும், பள்ளி வளாகத்தினை தற்போது உள்ளவாறு தொடர்ந்து தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட வேண்டும். அரசு பள்ளி மற்றும் கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்துதர அரசு தயாராகவுள்ளது. பொதுமக்கள் அரசின் திட்டங்களை முழுமையாக தெரிந்து கொண்டு, அதன் பயன்களை பெற்று தங்களது வாழ்க்கை தாரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என பேசினார்.

இவ்விழாவில், தென்காசி வருவாய் கோட்டாட்சித்தலைவர் திரு.ராஜேந்திரன், ஜனதாசெம் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு.சின்ன வெங்கட்ராஜா, சிவகிரி வட்டாட்சியர் திருமதி.சாந்தி, வாசுதேவநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.சத்திஅனுபமா, உதவி தொடக்க கல்வி அலுவலர்கள் திரு.ராஜமுருகன், திரு.சண்முகசுந்தரபாண்டியன், அருகன்குளம் ஊர் நாட்டாமை திரு.பிச்சைமணி தேவர், பள்ளி தலைமை ஆசிரியர் திரு.சந்திரன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.